கூட்ட எண் – 04/ 2022 ஆரணி நகராட்சி,

நாள்: 27.05.2022

**சாதாரணக் கூட்டம் அறிவிப்பு**

31.05.2022 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நகர மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர மன்ற தலைவர்,**
ஆரணி நகராட்சி.

**திருக்குறள்**

**கலங்காது கண்ட வினைக்கண் துளங்¦காது**
**தூக்கம் கடிந்து செயல்.**

**(அதிகாரம் 67–668)**

**பொருள்கள்**

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் மே–2022 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மே–2022 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சியில் 3.90 MLD கழிவு நீர் மற்றும் கசடு கழிவு உருவாகிறது. மேலும் கசடு கழிவுகளை சுத்திகரிக்க சட்டமன்ற அறிவிப்புகள் 2022–23–ல் அறிவிக்கப்பட்டதின்படி 20 KLD கொள்ளாவு கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆரணி நகராட்சிக்கு சொந்தமான இடம் சர்வே எண். 8, பிளாக் 5–ல் 1.82 ஏக்கர் பரப்பளவு கொண்ட வேலப்பாடி குப்பை கிடங்கில் மேற்படி கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் நிர்வாக அனுமதியும், தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | Construction of 20 KLD Fecal Sludge Treatment Plant at Survey No.8, Block 5 Velapadi Compost Yard in Arani Municipality. | 300.00 |

**அலுவலக குறிப்பு:** 1.சட்டமன்ற அறிவிப்புகள் 2022–23–ல் அறிவிக்கப்பட்டதின்படி ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் FSTP அமைக்கும் பணி மேற்கொள்ளலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு அரசிடமிருந்து மான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். 535/2022/இ1)

4. அரணி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT)2022–2023–ன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆரணி நகராட்சிக்கு சொந்தமான இடம் சர்வே எண். 8, பிளாக் 4, வார்டு C–ல் 1684 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட வார்டு எண் 10 கைலாசநாதர் கோவில் அருகில் அறிவுசார் மையம் கட்டும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களிடம் நிர்வாக அனுமதியும், தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–28 அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | Construction of Knowledge Centre at Survey No.8, Block 4 Ward No.10 Near Kailasanathar Kovil in Arani Municipality. | 200.00 |

**அலுவலக குறிப்பு:** கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–2023–ன்கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் அமைக்கும் பணி மேற்கொள்ளலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு அரசிடமிருந்து மான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். 535/2022/இ1)

5. ஆரணி நகராட்சிகுட்பட்ட பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம், புதிதாக தூய்மை பணியாளர் குடியிருப்பு, புதிய கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், புதிய நவீன எரியூட்டும் நிலையம், புதிய அறிவுசார் மையம் கட்டிடம், புதிய ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் குடியிருப்பு கட்டிடம் மற்றும் புதிதாக நகர்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையம் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ள Road Ledger மற்றும் Drawing CAD Drawing ,Detail Project Report தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டி உள்ளூர் (CAD DRAWING) நிறுவனத்திடம் ஒப்படைத்து பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.1.00இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:–**1, மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினம் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். 2 அவசர அவசியம் கருதி இத்தொகை வழங்க மன்றம் முன் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.766/இ1/2021)

6. ஆரணி நகராட்சி 22.08.1996 ஆம் ஆண்டு முதல், முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 2011 கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 63671 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு 9.76 சதுர கிலோ மீட்டர் கொண்ட 33 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகரில் 426 தெருக்களும் சுமார் 15061–க்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளது. நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை ஆய்வு செய்யவும் , குடிநீர் விநியோகம் , தெருவிளக்குகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளவும், நகரமன்ற தலைவர் அவர்கள் நகரினை ஆய்வு மேற்கொள்ளவும் சிரமமான சூழ்நிலை உள்ள காரணத்தினால் நகரமன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு ஈப்பு வாகனம் (மஹிந்திரா–பொலேரோ) தேவைப்படுகிறது. எனவே இந்நகராட்சிக்கு ஈப்பு வாகனம் 1 எண்ணிக்கை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கும், மேற்படி செலவின தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கும் மேலும் நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பியதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:** நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பியதற்கு மன்ற ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.515/2022/இ1)

7. ஆரணி நகராட்சி தூய்மை பாரத திட்டம் SWATCHTAM MIS PORTAL நகராட்சி எல்லைகள் புதிய வார்டு எல்லைகள் வரைபடத்தில் பதிவேற்றம் செய்வது ODF + மற்றும் GARBAGE FREE CITY நகர தரத்திற்கான ஆவணங்கள் பதிவேற்றம் செய்ய வரைபடம் தயார் செய்து கொடுத்த SKM Designs ஆரணி நிறுவனத்திற்கு ரூ. 17405/–வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்: 611/2021/எச்1)

8. ஆரணி நகராட்சி எல்லைக்குட்ட்பட்ட வார்டு எண்: 19 கதவு எண்: 45 சுந்தரம் தெருவில் வசிக்கும் திரு.T.ஆறுமுகம் என்பவர் இடத்தில் Silk Twisting Factory 18.06.2010 முதல் பட்டு முருக்கு ஆலை காலி செய்துவிட்டதாக கோரியுள்ளார். அடிப்படையில் வருவாய் ஆய்வர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு அவ்விடத்தில் Silk Twisting Factory ஏதும் நடைபெறவில்லை என அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.எனவே மேற்படி தொழில் வரி விதிப்பு எண்: 038/019/00089 ஐ கணினியிலிருந்து 01.04.2022 கேட்பினை நீக்கம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி தொழில்வரி விதிப்பு கேட்பினை 01.04.2022 முதல் கணிணியிலிருந்து நீக்கம் செய்யலாம். (கோப்பு எண் : 2485/அ2/2022)

9. ஆரணி நகராட்சி எல்லைக்குட்ட்பட்ட வார்டு எண்: 16 கதவு எண்: 69 பழனிஆண்டவர் கோவில் தெருவில் வசிக்கும் திரு P. கோதண்டன் என்பவர் இடத்தில் Silk Factory ஏதும் நடைபெறவில்லை எனவும் தவறாக விதிக்கப்பட்ட தொழில் வரியை ரத்து செய்ய கோரியுள்ளார். அதன் அடிப்படையில் வருவாய் ஆய்வர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு அவ்விடத்தில் Silk Factory ஏதும் நடைபெறவில்லை என அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.
எனவே மேற்படி தொழில் வரி விதிப்பு எண்: 038/016/00020ஐ கணிணியிலிருந்து 01.04.2022 கேட்பினை நீக்கம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி தொழில்வரி விதிப்பு கேட்பினை 01.04.2022 முதல் கணிணியிலிருந்து நீக்கம் செய்யலாம். (கோப்பு எண் : 2485/அ2/2022).

10. இந்நகராட்சியின் அனைத்து பிரிவுகளின் உபயோகப்படுத்தப்படும் தொலைபேசி இணைப்பு கட்டணம் BSNL நிறுவனத்திற்கு மாதம்தோறும் செலுத்தப்பட வேண்டியுள்ளது. 2022–2023 ஆம் ஆண்டிற்கு மேற்படி தொலைபேசி கட்டணம் செலுத்த தோராய செலவினம் ரூ. 1,50,000 /– ஐ மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

11. இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் மின்கம்பி உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31.05.2019 அன்று பணி ஒய்வு பெற்ற திரு.கே.சுப்பிரமணி என்பவருக்கு கீழ்கண்டுள்ளவாறு

| | | |
|---|---|---|
| 1 | சிறப்பு சேம நலநிதி அசல் | ரூ. 2960 |
| 2 | சிறப்பு சேம நலநிதி அசலுகான வட்டி | ரூ. 14481 |
| 3 | நிர்வாக பங்குத் தொகை | ரூ. 10000 |
| | **ஆகமொத்தம்** | **ரூ. 27441 ஐ** |

வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
கோப்பு :– ந.க.எண் 394/பி2/2022

12. இந்நகராட்சியின் பொது பிரிவில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 28.02.2022 பணி ஒய்வு பெற்ற திரு.ந.வெங்கடேசன் என்பவருக்கு,

| | | |
|---|---|---|
| 1. | சிறப்பு சேம நலநிதி அசல் | ரூ. 4500 /– |
| 2. | சிறப்பு சேம நலநிதி அசலுகான வட்டி | ரூ. 3909 /– |
| 3. | நிர்வாக பங்கு தொகை | ரூ. 10000 /– |
| | ஆகமொத்தம் | ரூ. 18409 /– ஐ |

வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:** மன்ற அனுமதி அளிக்கலாம்.(கோப்பு :– ந.க.எண் 378/பி2/2022)

13. ஆரணி நகராட்சியின் 2020 – 2021 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.1,40,592/– யை உரிய அரசு தலைப்பில் செலுத்த கோரி உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை திருவண்ணாமலை அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி நிலுவையில் உள்ள தணிக்கை கட்டணம் ரூ. ரூ.1,40,592/– (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று தொண்ணூற்றி இரண்டு மட்டும் ) செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்: 2706/2017/எப்1)

14. ஆரணி நகராட்சிகுட்பட்ட வார்டு எண். 10 கோட்டை மேற்கு தெரு பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம், வார்டு எண்.11 கார்த்திகேயன் சாலை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ரூ.400.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக தூய்மை பணியாளர் குடியிருப்பு, வார்டு எண்.24 மில்லர்ஸ் சாலை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், வார்டு எண்.24 மில்லர்ஸ் சாலை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ரூ.125.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன எரியூட்டும் நிலையம், வார்டு எண். 10 கைலாசநாதர்கோவில் அருகில் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அறிவுசார் மையம் கட்டிடம், வார்டு எண்.10 கோட்டை மேற்கு தெரு பகுதியில் இடத்தில் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் குடியிருப்பு கட்டிடம் மற்றும் வார்டு எண்.11 கார்த்திகேயன் சாலை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக நகர்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையம் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தினை ஆய்வு செய்து மண் பரிசோதனை சான்று வழங்க முதல்வர், தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரி, வேலூர்–02 அவர்களை கோரியதில் மேற்படி மண் பரிசோதனைக்கு Soil Test கட்டணமாக ரூ.141600/–ஐ செலுத்துமாறு கடிதம் அனுப்பி உள்ளார். பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**1, மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினம் நகராட்சி வருவாய் நிதின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். 2 அவசர அவசியம் கருதி இத்தொகை வழங்க மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்.514/இ1/2022)

15. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 1 முதல் 18 பழைய வார்டுகள் மற்றும் புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், காந்தி ரோடு, ஆகிய பகுதிகளில் தூய்மை பணிகள் செய்ய மல்லிகை சுயஉதவிக்குழு மூலம் 116 பேர் சப்ளை செய்கின்றனர். அதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்கள் நிர்ணயித்த தினக்கூலி ரூ. 404/– வழங்கப்படுகிறது. மேற்படி குழுவிற்கு மார்ச் – 2022 முதல் மே 2022 வரை ஊதியம் வழங்க ரூ. 44.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** 1.மன்றம் அனுமதிக்கலாம். 2.மார்ச் 2022, ஏப்ரல் 2022 மாதங்களுக்கு நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண். 264/2020/எச்1**

16. நகரமன்ற தீர்மானம் எண். 370, நாள். 25.01.2022ல் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின்படி இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவுக்கு தேவையான சுண்ணாம்பு நீர் 5டன், பிளிச்சிங் பவுடர் 5டன் ஆகியவை SELVA SAFETY நிறுவனம் திருச்சியில் வாங்கியதற்கு GST 18% உட்பட 276825/-யை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**1.மன்றம் அனுமதிக்கலாம். 2.அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 483/2020/எச்1)**

17. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை -28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.11753/2022/எம்3 நாள்:10.05.2022ல் ஆரணி நகராட்சி நகரமன்ற தலைவர் அலுவலக பயன்பாடிற்கு புதியதாக ஒரு ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் ரூ.1682000/- இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கி வரப் பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.515/2022/இ1)

18. ஆரணி நகராட்சியில் ஆற்காடு முப்பது வட்டி தலைமை நிரேற்று நிலையம் மூலம் நாள் ஒன்றுக்கு 3MLD ஆரணிக்கு வருகிறது. இது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் UIDSSMT திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு, தற்போது Booster Station-ல் இரவு காவலர் மற்றும் மின்மோட்டார்களை இயக்க,ஏற்கனவே தனியார் சாய் பாபா ஆண்கள் குழு மூலம் மின்மோட்டார்கள் இயக்கப்பட்டு வருகிறது. இந்த குழுவிற்க்கு மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ள ஊதிய நிர்ணயத்தில் செயல்படுத்த 2022-2023ம் நிதி ஆண்டிற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**1)மன்றம் அனுமதிக்கலாம். 2)மேலும், மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.(கோப்பு எண் 766/2020/இ1)

19.நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்.31118/ 2021/அம்ருட்-2, நாள்.06.12.2021-ல் 15வது மத்திய நிதிக் குழு மான்யம் 2021-2022 கட்டிமான்யம் (Un Tied Grant) நிதியின் கீழ், கீழ்காணும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியதிர்கிணங்க ஆரணி நகராட்சியில் வார்டு எண்.12- செல்வவிநாயகர் கோயில் தெருவில் சிமெண்ட்சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ. 20.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள 05.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப பரிந்துறைக்குழுவின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களில் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய உரையில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் ஒப்பு நோக்கி ஆய்வு செய்ததில், ஒப்பந்த நமுனாவில் குறிப்பிட்டிருந்த அனைத்து இனங்களிலும், இரண்டு நபருமே தகுதியுடையவராகிறார் என குழுவின் ஒப்பு நோக்கு பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையின் பேரில் தொழில் நுட்ப தகுதியின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகிதம் அடங்கிய உறையினை 05.04.2022 அன்று மாலை 3.00 மணியளவில் பிரிக்கப்பட்டது. அதன் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | வழங்கப்பட்ட விலை விகிதம் ரூ. | வழங்கப்பட்ட விலை விகிதம் சதவிகித்தில் |
|---|---|---|---|---|---|
| கட்டிமான்யம் (un–tied Grant) | | | | | |
| 1. | ஆரணி நகராட்சியில் வார்டு எண்.12– செல்வவிநாயகர் கோயில் தெருவில் சிமெண்ட்சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 20.00 | V.சுரேஷ், பள்ளிகூடதெரு, ஆரணி.<br><br>R.நேரு, ஆரணி | ரூ.1729820.94<br><br>ரூ.1751378.46 | 0.19 குறைவு<br><br>1.06% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்கண்ட பணிக்கு குறைவானதாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.V.சுரேஷ்,பள்ளிகூடதெரு, ஆரணி. என்பவர் அளித்துள்ள விலைபுள்ளியை ஏற்கலாம். நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.1425/இ1/2021)

20. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.31118/2021/ அம்ருட்–2, நாள்.06.12.2021–ல் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021–2022 கட்டிமான்யம் (Tied Grant) நிதியின் கீழ், கீழ்காணும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியதிர்கிணங்க ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதிப்பீடு ரூ.38.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள 05.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப பரிந்துறைக்குழுவின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களில் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய உரையில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் ஒப்பு நோக்கி ஆய்வு செய்ததில், ஒப்பந்த நமுனாவில் குறிப்பிட்டிருந்த அனைத்து இனங்களிலும், இரண்டு நபருமே தகுதியுடையவராகிறார் என குழுவின் ஒப்பு நோக்கு பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையின் பேரில் தொழில் நுட்ப தகுதியின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகிதம் அடங்கிய உறையினை 05.04.2022 அன்று மாலை 3.00 மணியளவில் பிரிக்கப்பட்டது. அதன் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | வழங்கப்பட்ட விலை விகிதம் ரூ. | வழங்கப்பட்டவிலை விகிதம் சதவிகித்தில் |
|---|---|---|---|---|---|
| கட்டிமான்யம் (Tied Grant) | | | | | |
| 1. | ஆரணி நகராட்சிக்கு 6000 லிட்டர் கழிவுநீர் டேங்கர் லாரி(Sewerage Tanker Lorry) புதியதாக வாங்குதல் | 38.00 | M/s Sakthi Body Works Chennai –56<br><br>M/s Vambsk Fabs–641025 | ரூ.3797000.00<br><br>ரூ.3986850.00 | 0.08% குறைவு<br><br>4.92% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்கண்ட பணிக்கு குறைவானதாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய M/s Sakthi Body Works, Chennai என்பவர் அளித்துள்ள விலைபுள்ளியை ஏற்கலாம். (கோப்பு எண்.1425/இ1/2021)

21. திரு.K.கௌரிசங்கர் த/பெ குலசேகரன் நெ.13 சாந்தா தெரு, ஆரணிபாளையம் ஆரணி என்பவர் ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்யவும் (காணொலியுடன் கூடிய ஒலி பெருக்கி) ஒப்பந்தத்தை வழங்க கோரியுள்ளார்.மேற்படி மனுதாரர் கோரியவாறு பழைய பேருந்து நிலையத்தில் ஏற்கனவே காலியாக உள்ள கடை எண்: 15 யை தனியருக்கு ஒப்பந்த விதிகளின் படி குத்தகைக்கு விடவும் இவ்வினத்தை குத்தகை இனத்தில் சேர்க்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**1.மன்றம் அனுமதிக்கலாம். 2. மேலும் அதற்கான ஒப்பந்தப் புள்ளி விளம்பரம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 3.மேற்படி இனத்தை குத்தகை இனத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண்.544/அ3/2022)

22. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடை மூன்றாண்டு குத்தகை காலம் முடிவடைவதால் மேலும் மூன்று ஆண்டுகள் குத்தகையினை புதுபிக்கவும் தற்பொழுது பெறப்படும் வாடகைத் தொகையினை 15% சதவீதம் உயர்வு செய்தும் வசூல் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரி விதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | குத்தகை காலம் முடிவடையும் நாள் | தற்போது பெறப்படும் வாடகை | 15% உயர்வு | 15%சதவித உயர்வுக்கு பின் வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 038/BDO1/ 00022 | ஆர்.சிவக்குமார் பெரியார் மாளிகை கடை எண்.5 | 31.10.2021 | 14650.00 | 2198.00 | 16848.00 |
| 2. | 038/576 | D.குமார் ஆவின் பால்பூத் | 31.03.2022 | 966 | 145 | 1111.00 |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண்: 706/அ3/2021)

நகர மன்ற தலைவர்,
ஆரணி நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
ஆரணி.

நாள்:27.05.2022